**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 84/2022</u>**

பெயர் : பாலு D.W.1. Cross

த/பெ. : சொக்கலிங்கம்

தேதி : 12.02.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் விற்பனை செய்த வீட்டை விற்பனை செய்யவில்லை என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் சொக்கலிங்கத்திற்கும் தாயார் பவானிக்கும் யார் யார் வாரிசுகள் என்றால் பாலு, ராமசாமி, தேவசேனா, உஷா, சாவித்திரி ஆகியோர் ஆவார்கள். எனது தகப்பனார் மற்றும் தாயார் எந்த தேதியில் இறந்தார் என்று நினைவில் இல்லை. நான் தான் மூத்த வாரிசு என்றால் சரிதான். நான் திருமணம் செய்து கொண்டதும் திருவிடைக்கழியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது மனைவி எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர் ஆவார்.

2. திருமணத்திற்கு பிறகு நான் எனது குடும்பத்தாருடன் எவ்வளவு வருடம் கூட்டு குடும்பமாக வசித்து வந்தேன் என்றால் 1 வருடம் தான் வசித்து வந்தேன். அதற்கு பின்னர் எனது மாமனார் வீட்டில் எனது மனைவியுடன் வசித்து வருகிறேன். அதன் பிறகு எனது பெற்றோருடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கணேசன் பிள்ளை என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். கணேசன் பிள்ளை என்பவருக்கு யார் யார் கிரய ஒப்பந்தம் செய்து கொடுத்தோம் என்றால் எனது தந்தை இறந்துவிட்டதால் எனது தாயாரும் நானும் செய்து கொடுத்தோம். அதன் பிறகு 3 ஆண்டுகள் கணேசன் என்பவர் தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்.

3. நானும் எனது தாயாரும் கணேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதன் பின்னர் கணேசன் தாவா வீட்டை என்ன செய்தார் என்று தெரியுமா என்றால் 1991ம் ஆண்டு திருவிடைக்கழியை சேர்ந்த பாலகிருஷ்ணன் நாயுடு என்பவரிடம் விற்றுவிட்டார். மேற்படி கணேசன் என்பவரது மகனை எனது தம்பியான 2ம் பிரதிவாதி ராமசாமிக்கு திருமணம் செய்து வைத்துள்ளோம் என்றால் சரிதான். எனக்கும் 2ம்

பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். எனது தாயார் வாதி சாவித்திரியுடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் சாவித்திரி வீட்டில் தான் இறந்தார் என்றால் சரிதான். எனது தாயாரின் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன்.

4. எனது தாயார் 02.03.2016 அன்று இறந்த பிறகு நான் வாதியுடன் பேச்சுவார்த்தையில் இருந்தேனா என்றால் இல்லை. வாதி தாவா சொத்தை பொறுத்து பாகம் கோரி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. கணேசன் தாவா சொத்தில் உள்ள வீட்டை பாலகிருஷ்ணனுக்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தம் மூலம் கொடுத்தார். நான் திருமணம் ஆகி தனியாக சென்று விட்டதால் எனக்கு எனது குடும்பத்தில் உள்ள சொத்து பற்றி தெரியாது என்றாலும், கணேசன் என்பவர் எனது உறவினர் என்பதால் நானும் அவரும் சேர்ந்து மோசடியாக ஆவணத்தை தயார் செய்து வாதியாகிய எனது சகோதரிக்கு பாகம் கிடைக்க கூடாது என்பதற்காக பொய்யான எதிர் வழக்குரையை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5. பொதுவாக குடும்ப சொத்தில் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் நான் 1988ல் வீடு விற்பனை செய்த சமயத்தில் அந்த சட்டம் இல்லை. 1988ம் ஆண்டில் எனது உடன் பிறந்தவர்கள் அனைவரும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்றால் சரிதான். எனவே, இந்த வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு 1/5 பாகம் உள்ளது என்றாலும், அதற்கு மாறாக நான் பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.